செய்தி வெளியீடு எண்:412 நாள்:09.07.2021

**<u>செய்தி வெளியீடு</u>**

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் கலை, இலக்கிய மேம்பாட்டுச் சங்கத்தின் மூலம் தேர்வு செய்யப்பட்ட 21 சிறந்த எழுத்தாளர்களுக்குப் பரிசுத்தொகை மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் கலை இலக்கிய மேம்பாட்டுப் பணிக்கான தனி பணிக்குழு நிதியான (CORPUS FUND) ஐம்பது இலட்சம் ரூபாயிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகையினைக் கொண்டு ஆதிதிராவிடர் / பழங்குடியினர் / மதம் மாறிய ஆதிதிராவிட கிறித்துவர்களின் சிறந்த 10 படைப்புகள் மற்றும் ஆதிதிராவிடர் அல்லாதோர் ஒருவரின் சிறந்த படைப்பையும் சேர்த்து மொத்தம் 11 படைப்புகளைத் தேர்வுசெய்து, அப்படைப்புகளுக்குப் பரிசுத்தொகையும், பாராட்டுச் சான்றிதழும் ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகிறது.

அதன்படி, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் கலை, இலக்கிய மேம்பாட்டுச் சங்கத்தின் மூலம் 2018-2019ஆம் ஆண்டிற்கான சிறந்த படைப்புகளுக்காகத் தேர்வு செய்யப்பட்ட முனைவர் ந. அறிவரசன் (கபிலரின் செயற்கையற்ற வாழ்வும் மொழி நடையும்), திருமதி. எஸ். வசந்தா (திருக்குறளில் பௌத்தம்), திரு.எம்.பிரேம்குமார் (மாமன்னர் அசோகர்), முனைவர் சு.அ. அன்னையப்பன் (தொண்டை மண்டலப் பண்பாட்டில் திரௌபதியம்மன்), திரு. சு.சுகிர்தராஜா (வஞ்சிக்கப்பட்டவனின் வாய்க்கரிசி), திருமதி. இரா. கலாராணி (பௌத்த தியானம்), திருமதி. டி.மோனிகா, (பேரறிஞர் அம்பேத்கர்), திரு. மு. ரமேஷ் (சங்க இலக்கியத்தில் நிலங்கள், குடிகள், வழிபாடுகள்), செல்வி. கே. பரமேஸ்வரி (தடை அதை உடை புதிய சரித்திரம் படை - உளவியல் கட்டுரை), திரு.அன்பாதவன் (இப்போதும் ஓடிக் கொண்டிருக்கும் குதிரை), திரு. ம. இளங்கோவன் (தமிழரின் பண்பாட்டுப் பதிவுகள்) ஆகியோருக்கும்;

2019-2020ஆம் ஆண்டிற்கான சிறந்த படைப்புகளுக்காகத் தேர்வுசெய்யப்பட்ட திரு. அ. கருப்பையன் (தடையும் ஒரு நாள் உடையும்), திரு.ச. சண்முகசுந்தரம்

(குப்பத்து ராஜாக்கள்), முனைவர் க. மோகன் (உயிர்த்தாள் உயிர் நீங்கினாள்), திரு.எ. பாரதிராஜா (வெற்றி முழக்கங்கள்), முனைவர் செ. காளிமுத்து (தமிழ் இலக்கியங்களில் மருத்துவம்), திரு. அன்டனூர் சுரா (எத்திசை செலினும்), திரு. மீனாசுந்தர் என்கிற மா. மீனாட்சி சுந்தரம் (படைப்பு வெளியில் பதியும் பார்வைகள்), திருமதி. ஆர். கமலம் சின்னசாமி (நலம் தரும் நாட்டு வைத்தியம்), முனைவர் ம. ராஜா (உலக மயமாக்கல் சூழலில் நாட்டுப்புறக் கலைகள்-ஓர் பன்முகப் பார்வை - கட்டுரைத் தொகுப்பு), திரு.மு.வெ. ஆடலரசு (இசை மொழியும், ஆதி இனமும்) ஆகிய 21 சிறந்த எழுத்தாளர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று (9.7.2021) தலைமைச் செயலகத்தில் முதல் தவணைத் தொகையாகத் தலா இருபதாயிரம் ரூபாய்க்கான காசோலைகள் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி. என்.கயல்விழி செல்வராஜ், தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, இ.ஆ.ப., ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் க. மணிவாசன், இ.ஆ.ப., ஆதிதிராவிடர் நலத்துறை ஆணையர் திருமதி சோ. மதுமதி, இ.ஆப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**************

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9